**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 19/2021 |
| Name | : Palani |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.12.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளத்தில் வசிக்கிறேன். கிராம உதவியாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 12.06.2017 ம் தேதி நான் பாப்பான்குளம் கிராம நிர்வாக அலுவலகத்தில் பணியில் இருந்த போது மதியம் 02.00 மணி அளவில் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் இருந்து வெடி மருந்து வழக்கு சம்மந்தமாக பாப்பான்குளம் உயர் நிலைப் பள்ளி அருகில் அழைத்தன் பேரில் நானும், கிராம நிர்வாக அலுவலர் சண்முகானந்தமும் அங்கு சென்றோம். உயர் நிலைப் பள்ளி அருகில் மணிவாசகம் என்பவரின் தோட்டத்திற்கு சென்றோம். ஆய்வாளர், போலீசார் மற்றும் ஆஜர் எதிரி மணிவாசகம் ஆகியோர் இருந்தார்கள். வெடி மருந்து இருந்தது. வரைபடம் வரைந்து போலீசார் என்னிடம் சாட்சியாக கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் கிராம நிர்வாக அலுவலர் சண்முகானந்தமும் கையெழுத்து போட்டார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மணிவாசகம் போலீசாரிடம் அவர் தான் வெடிமருந்தை வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது

கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகு குறியீடு செய்யப்படுகிறது.** சுமார் 4–5 பெட்டி வெடி மருந்து, வெடி மருந்து வாங்கியதற்கான ரசீது மற்றும் எதிரியின் சொத்து சம்மந்தமான சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் வெடி மருந்து மற்றும் டெட்டனேட்டர் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் வருவாய் ஆவணங்கள் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.12.04 15:12:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்